DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No.115/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 19th day of December 2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 2** | கிராமம் | : | அண்ணாநகர் |
| பெயர் | : | முனியாண்டி | தாலுகா | : | இராமநாதபுரம் |
| க/ பெ. | : | முனியான் | சமயம் | : | இந்து |
| வயது | : | 48 | தொழில் | : | கூலி |

<u>நாள்: 19.12.2022</u>

<u>நேரம்: 3.45 .பி.ப.</u>

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இராமநாதபுரம் அண்ணாநகரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அனைவரும் எனக்கு பங்காளி முறை வேண்டும். அ.சா.1 எனது மனைவி. ஒன்றரை வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 9 1/2 மணியை போல் நான் எங்கள் வீட்டு திண்ணையில் உட்கார்ந்து இருந்தேன். பின்பு 4ம் எதிரி எங்களுடன் வீட்டு திண்ணையில் வந்து உட்கார்ந்தார். அப்போது எங்களுக்குள் அரசியல் சம்பந்தமாக பேச்சுவார்த்தை வந்தது. அதில் எனக்கும் 4ம் எதிரிக்கும் இடையே அரசியல் பேசியதில் கருத்துவேறுபாடு வரவே 4ம் எதிரி அரசியல் தலைவர்களை விமர்சிக்க ஆரம்பித்தார். இதனால் நான் 4ம் எதிரியிடம் எனது திண்ணையிலிருந்து அரசியல் பேச வேண்டாம் உங்கள் வீட்டுக்கு போங்கள் என்று சொன்னேன். 4ம் எதிரி வீட்டுக்கு சென்றுவிட்டார். அதை கேட்ட 1ம் எதிரி ஓடி வந்து என்னை அசிங்கமாக பேசினார். அ.சா.1 1ம் எதிரியிடம் உன் வயசு என்ன அவர் வயசு என்ன ஏன் இப்படி அசிங்கமாக பேசுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு 1ம் எதிரி எனது மனைவியை ஏற்கனவே அறுவைசிகிச்சை செய்த கண்ணில் ஓரே அறையாக அறைந்துவிட்டார். பேச்சுமூச்சு இல்லாமல் எனது மனைவி கீழே விழுந்துவிட்டார். நான் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து எனது மனைவி அ.சா1றை சிகிச்சையில் சேர்த்தேன். அங்கு வைத்து போலீசாரிடம் புகார் கொடுத்தேன். அந்த புகாரில்

நான் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தேன். அ.சா.1 சுமார் ஒரு வாரகாலம் சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு கு.வி.**

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை.)

மறு விசாரணை- இல்லை.

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2022.12.19 17:55:32 +0530

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No.115/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 19th day of December 2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 1** | கிராமம் | : | வசந்தநகர் |
| பெயர் | : | முனீஸ்வரி | தாலுகா | : | இராமநாதபுரம் |
| க/ பெ. | : | முனியாண்டி | சமயம் | : | இந்து |
| வயது | : | 48 | தொழில் | : | இல்லத்தரசி |

<u>நாள்: 19.12.2022</u>

<u>நேரம்: 3.25 .பி.ப.</u>

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இராமநாதபுரம் வசந்தநகரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அனைவரும் எனக்கு பங்காளி முறை வேண்டும். 06.04.2021ம் தேதி நான் தேர்தலில் ஓட்டுபோட்டுவிட்டு எனது வீட்டு திண்ணையில் நான் எனது கணவரும் உட்கார்ந்து இருந்தோம். பின்பு 4ம் எதிரி எங்களுடன் வீட்டு திண்ணையில் வந்து உட்கார்ந்தார். அப்போது எங்களுக்குள் அரசியல் சம்பந்தமாக பேச்சுவார்த்தை வந்தது. அதில் எனது கணவருக்கும் 4ம் எதிரிக்கும் இடையே அரசியல் பேசியதில் கருத்துவேறுபாடு வரவே 4ம் எதிரி அரசியல் தலைவர்களை விமர்சிக்க ஆரம்பித்தார். இதனால் எனது கணவர் 4ம் எதிரியிடம் எனது திண்ணையிலிருந்து அரசியல் பேச வேண்டாம் உங்கள் வீட்டுக்கு போங்கள் என்று சொன்னார். ஆனாலும் 4ம் எதிா கேட்கவில்லை. உடனே எனது கணவர் கொஞ்சம் சத்தமாக சொன்னார். இதை கேட்ட 1ம் எதிரி ஓடி வந்து எப்பப்பார்த்தாலும் ஏன் என் அம்மாவிடம் சண்டைபோடுகிறீர்கள் எங்க அம்மா என்ன இளக்காரம்மா என்று சொல்லி எனது வீட்டு திண்ணையில் இருந்த சைக்கிளை எடுத்து என் மீது தூக்கி எறிந்தார். 1ம் எதிரியை 4ம் எதிரி தடுத்தும் கேட்காமல் 1ம் எதிரி ஓடி வந்து எனது கணவரை ஓங்கி அடித்தார். அப்போது விலக்க சென்ற எனது மகன் மற்றும் எனது கணவரை எதிரிகள் அனைவரும் சேர்ந்து மாறி மாறி அடித்தனர். அப்போது நான் எனது மகனை

எதிரிகள் அடிப்பதை பார்த்து தடுக்க சென்றபோது 1ம் எதிரி ஓடி வந்து அறுவை சிகிச்சை செய்த வலது கண், மற்றும் கன்னத்தில் ஓங்கி அறைந்து என்னை கீழே தள்ளிவிட்டார். அதில் நான் மயக்கமாகிவிட்டேன். எனது மகன் 108 க்க போன் செய்து என்னை இராமநாதபுரம் அரசுமருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். நான் சிகிச்சையில் இருக்கும்போது போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். நான் 6 நாட்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தேன். அந்த புகார் வாக்குமூலத்தில் எனது கணவர் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தார். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு கு.வி.**

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை.)

மறு விசாரணை- இல்லை.